தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M.A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஸு ஆனிமீ 14உ (28-6-'22.) | ப. 10.

சஞ்சீவாஞ்சன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை மார் முதுகு இடுப்பு	வலி	தேள் பாம்புக் பூச்சிக் விஷக்	கடி	பல் கால் காது கை	நோவு

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்.

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை!

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

ஆந்தர ஆயுர்வேத வைத்திய சாலை

லிமிடெட்.

19, ஆரிஸ் ரோட்டு, சென்னை.

டாக்டர் A. லக்ஷ்மிபதி

Founder and Managing Director.

சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி
தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.

கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

தபால் கூலியுள்பட சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0
அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

'தமிழ் உலகு' கார்யாலயம்
16, பசுபதி அக்கிரஹாரம்
மைலாப்பூர் சென்னை

அடுத்தவாரம் முதல் நமது பத்திரிகையில் டாக்டர் ரவீந்திரநாத் டாகூர் எழுதியுள்ள 'ரெக்' என்னும் கிரந்தம் தமிழில் ஸ்ரீமான் V. நாராயணய்யர் M. A. M. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டு வெளிவரும். மொழிபெயர்க்க அனுமதி கொடுத்த மஹாகவிக்கும், மாக்மிலன் கம்பெனியாருக்கும் நாம் வந்தனம் செலுத்துகின்றோம்.

பத்திராதிபர்

விஷய அடக்கம்.

ஓர் அறிவிப்பு	74
மோகனதாஸ் கராம் சந்த் காந்தி ...	74
ஸர் ஹென்ரி வில்ஸன்.	75
சித்திரா	76
மோதிலால் நேரு	78
பலநாள் பெருந்திருடன்	79

தமிழ் உலகு

துந்துபிஹூ ஆனிமீ 14உ

ஓர் அறிவிப்பு

அடுத்தமாதம்முதல் இப்பத்திரிகையைப் பன்னிரண்டு பக்கமாகப் பெருக்க எண்ணுகிறோம். இதுவரையில் மிகுந்த பக்ஷத்துடன் நம்மை ஆதரித்து வந்ததற்காக எல்லோருக்கும் நாம் வந்தனம் செலுத்துவது செய்நன்றியே. நாட்டின்கண் ஸகல விஷயங்களையும் நாம் தமிழில் எடுத்தெழுத முன் வந்திருப்பது மிகவும் துணிவுள்ளதாய்த் தோன்றினாலும், வயதிலும் ஐசுவரியத்திலும் முதிர்ந்த அறிவாளர்கள் நம் சிரமத்தை யுணர்ந்து, தாராளமாக நமக்குதவி புரிவார்களென்பதில் கொஞ்சமும் சந்தேகமில்லை. ஆங்கில பாஷையில் எவ்வளவு நேர்த்தியாய்ப் பத்திரிகைகள் வெளிவருகின்றனவோ, அவ்வளவு உயர்ந்ததாகவே தமிழிலும் நமது நாட்டினருக்கு நாம் எல்லாவற்றையும் கற்பிக்கத் தூண்டப்படுகின்றோம். இதுகாறும் படிப்பில் தேர்ந்த பலர் இப்பத்திரிகையில் எழுதிவந்ததற்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு ஒன்றுமில்லை. ஸ்வராஜ்யா, ஹிந்து, டெய்லி எக்ஸ்பிரஸ், சுதேசமித்திரன், நவசக்தி இவைகளில் நம்மைப்பற்றித் தோன்றிய நல்வார்த்தைகள் அவைகளின் உதார குணத்தையே காட்டுகின்றன. மேலும் நாம் என்றைக்கும் அவைகளால் கொண்டாடப் படவேண்டுமாகின், இன்னமும் நாம் எவ்வளவு தூரம் பதின்மடங்கதிகமாயுழைக்க வேண்டு மென்பதை வெளிதிற் காண்கின்றோம். நம்முடைய பிழைகளையும், குறைவையும் நாம் அறிந்திருந்த போதிலும், நமது க்ஷேமத்தில் கண்ணாயிருப்பவர்கள் நமக்கு எப்பொழுதாவது நற்போதனை செய்வார்களே யாகில், நாமளவற்ற சந்தோஷமடைவோம். ஆங்கில பாஷையை நன்கறியாத தோஷத்தால் நம் தமிழ் நாட்டில் ஆயிரக்கணக்கான ஜனங்கள் படும் அஞ்ஞானமாகிய கஷ்டத்தை நிவர்த்திக்க விரும்புகின்றோம். அதற்காகவே இனி நாம் ஆங்கிலப் பத்திரிகைகளிலிருந்து ஒவ்வொரு சாஸ்திரத்திலும் சாராம்சத்தைப் பெரும்பாலும் கொடுக்க எண்ணியிருப்பது யுக்தமென நமது நேயர்கள் ஒப்புக்கொள்ளுவார்கள். என்றால், தமிழையும், தமிழர்களின்நாகரீகத்தையும் நாம் அலக்ஷ்யம் செய்வதாக நம்புவதாகாது. தமிழிலுள்ள ஒவ்வோர் சாஸ்த்திரத்தின் பெருமையையும் விவரிப்பதற்கு அறிஞர்கள் சிலர் சித்தமாகயிருத்தல் உள்ளம் குளிர்ந்து களிப்பிக்கச் செய்கின்றது. டைம்ஸ், டெய்லி மெயில், நீயூஸ்டேட்ஸ்மன், மார்னிங்போஸ்ட், மான்சஸ்டர் கார்டியன், முதலிய பேபர்களில் தோன்றும் அரியவிஷயங்களை நாம் உடனே இப்பத்திரிகையில் வெளியிட உத்தேசித்திருக்கின்றோம். ராஜாங்க வ்யவகாரங்களில் எங்கும் ஊக்கம் மேலீட்டிருக்கையில், நாமிப்படி யெழுதிவருவது நன்மை பயக்கலாம். முன்னொருதரம் நாம் கூறியுள்ளபடி, நமது கல்வித்திறமையைக் காட்டுவதற்காகவே இப்பத்திரிகை அல்லவென்பதை மறுபடியும் வற்புறுத்துகிறோம். நம்மைப்பார்க்கிலும் நுண்ணறிவுள்ளவர்கள், நமது கருமத்தை மேற்கொள்ள நிச்சயமாய் சீக்கிரத்தில் வெளிக் கிளம்புவார்கள். அவர்கள் வருமளவும் தான் நாம் உழைத்தல் தகும். மேலும் அவர்களையே நாம் எதிர்பார்த்து நிற்கின்றோம். பங்காளத்தில் பெங்காலி எங்கும் வியாபித்திருப்பதுபோல் தமிழ் நாட்டிலும் நமது பாஷை தலைத் தோங்கி நிற்கும் நாள் விரைவில் வரவேண்டு மெனப் பிரார்த்திக்கிறோம்.

பத்திராதிபர்

மோகனதாஸ் கராம் சந்த் காந்தி

(தொடர்ச்சி)

விக்டோரியாவின் ஆளுகையில், அவரிடம் நம் ஜனங்கள் வைத்திருந்த எல்லையற்ற அன்பைப் பார்க்கிலும், மோகனதாஸ் காந்தியிடம் அன்பு செலுத்துவது மிகவும் ஆச்சரிய விநோதமாகத்தோன்றுகிறது. நிமிர்ந்த தலையுடன் மிக ஊக்கமாய் அவருதடுகளிலிருந்து விழும் ஒவ்வொரு வார்த்தையையும், நம்மிந்தியர்கள் எல்லோரும் கேட்டுவருகிறார்களென்றால், அவருடைய பெருமையைச் சொல்லவும் வேணுமோ? அஸ்தமித்த சூர்யனை ஒருபோதும் பார்த்திராத உலகமெங்கும் பரவிய அவ்வளவு அபாரமான ராஜ்யத்திற்கு சக்கிரவர்த்தினியாய் இருந்த விக்டோரியாவுக்கு ஸமானமாகவே, நம்மிந்தியர்களின் மனதை இவர் கவர்ந்து விட்டார். நம்முடைய பாக்கியத்திற்குப் போராததான இந்த காலத்தில், இந்தியாவில் இவர் ஒருவர் தோன்றியதே மிகவும் துக்கப்பட்ட நமக்கு ஒப்பற்ற ஓர் ஆறுதலைக் கொடுக்கின்றது. உயர்வற்ற உத்தியோகங்களையும், அதிகாரத்தையும், பொறுப்பையும், ஆங்கிலேயர்களை

ப்போல வகிக்கும் பாக்கியசாலிகளாய், நாம் இப்பொழுது இல்லாவிட்டாலும் என்ன? என்றும் காணக் கிடைக்காத தங்கம்போல் மகாதீரனும், ஸாத்விக குணமுள்ளவனும் ஓர் அபூர்வமான புத்திரனை சுமந்தெடுக்கும் ஸுகிருதத்தைச் செய்த நமது தாயான இந்தியாவில் ஆனந்த வெள்ளத்தில் நம்முடைய சொந்த துக்கங்களெல்லாம் இருந்த இடம் தெரியாமல், முற்றிலும் மறைந்து விடுகின்றன. மேலும், இந்த ஆனந்தப் பிரளயத்தில், நாம் அனுபவித்து வரும் துன்பங்களையே கொஞ்சமும் பிரதானமாய் பாராட்டுவது நம்முடைய ஆர்யதர்மத்திற்கு அழகல்ல. பல ஆயிரம் வருஷங்களுக்கு முந்தி, மற்றொரு யுகத்தில் ஹஸ்தினா புரியில் சந்திரவம்சத்தரசர்கள் ராஜ்ய பாரம் வகிக்குங்கால், தன் புத்திரர்களுடன் ஞாதிகளால் வஞ்சிக்கப்பட்டு கடும்புலிகள் வாழும் காடுகளில் எண்ணுதற்கரிய கொடுமைகளைப் பொறுத்துவந்த மாதர் சிரோமணியார் தன் மருமகளைப் பார்த்துப் பின்வருமாறு ஆசீர்வதித்தார்:—'குழந்தாய், படிப்பில் கரை தேர்ந்தவர்களும் சூரர்களுமான பிள்ளைகள் உனக்கு வேண்டாம். பாக்கியவானான பிள்ளையையே நீ பெறுவாயாக! ஏனெனில், என் மைந்தர்களைப் போலொத்த வீரர்களும் பண்டிதர்களும் வேறு எங்குமில்லை யென்றாலும், இதோ பார். இவர்கள் இக்கடும் காட்டிற்கே துரத்தப் பட்டார்கள்.' ஐயாயிரம் வருஷங்களுக்கு மேற்பட்டும் உயிர் பிழைத்திருக்கின்ற இந்த ஆசிச்சொல் அதிசயமான ஓர் அர்த்தத்துடன் கூடியிருப்பதாக நமக்குத் தோன்றுகிறது. நம்மைப்போலவே, இந்தியாவில் இப்பொழுதுள்ள ஸ்திதியில் இருக்கும் மனுஷ்யர்களின் சம்பந்தமாக இதன் கருத்தைப் பற்றி சற்று ஆலோசிப்போம். முதலில் பாக்கியத்திற்காகவென்று இந்தியர்களான நாம்பிறக்கவில்லை. அதிருஷ்டத்திற்கும் நமக்கும், பனிக்கட்டிற்கும் நெருப்புக்கும்போல, ஒருபோதும் ஒவ்வாதது என்ற ரகசியத்தையறிந்து கொள்வதற்கு நாம் ஜ்யோதிஷர்களைக் கேழ்க்கத் தேவையில்லை. ஏனென்றால் நம் தேசத்திலுள்ள ஸகல போகங்களையும் அனுபவிப்பதற்கு இங்கிலண்டு, ஸ்காட்லண்டு என்னும் த்வீபங்களில் மகா யோகசாலிகள் பிரதிதினமும் பிறக்கின்றார்கள். ஸர்வேசுவரனிடமிருந்து ராஜயோகம், பத்மயோகம், சக்ரயோகம் வஸுமதியோகம் ஆகிய இவைகளுக்குக் குத்தகைச்சீட்டு பெற்றிருக்கின்ற பிரிடிஷார் நம்மிந்தியாவை ஸமுத்திரத்தைப்போலக் கடைந்து அலைகளோடு கூடிய உப்பு நீரை பிறருக்கென்று தள்ளிவிடுவது ஓர் அற்புதக் காக்ஷியல்ல. பழையதும், புளித்த சோற்று ஜலமும் ஆகாரமாக உடைய அநேக லக்ஷம் ஜனங்கள் நம் தேசத்தில் ஓர் மாகாணத்தில் மாத்திரம் இருக்கிறார்கள். ஆகிலும் நம்முடன் கூடவே பிறந்த தரித்திரத்தின் கொடுமையினால் நாம் எவ்வளவுதூரம் சிறுமையை அடைந்தாலும் நம் இந்தியாவிலுள்ள நிலைமையை உத்தேசித்து, குந்திதேவியின் வாழ்த்துதலில் நாம் சிறிதும் சந்தோஷம் அடையவில்லை. கூடிய சீக்கிரத்தில், இந்த தேசத்திலுள்ள ஜனங்கள் ஒருபடியாவது முன்னேற வேணுமென்பதை நாம் ஞாபகத்தில் வைத்துக்கொள்வோம். அப்பொழுது அவர்களின் க்ஷேமத்திற்காகவும், நம் நாட்டின் மோக்ஷத்தை ஸம்பாதிப்பதற்காகவும், தீரர்களுக்கும் எவ்விதத் தியாகத்தையும் செய்யத்துணிந்தபுருஷ ஸிம்ஹங்களுக்கும் முன்னே, நம்மில் மிகவும் பாக்கியசாலியான ஓர் பெரியோனை வாஸ்தவமாகவே எவன் தேர்ந்தெடுப்பான்? அத்திபூத்தது போல நம் இந்தியர்களுள் பாக்கிய லக்ஷ்மியுடன் கூடிய சிலரை இதனால் நாம் இகழ்ந்துபேசவில்லை. ஜீஜீபாய், ஜிஹாங்கீர் பெடிட், ஸர் ராஜேந்திரநாத் முக்கர்ஜி, கரிம்பாய், டாடா, லார்ட் ஸின்ஹா இவர்களைப்பற்றிப் பெருமையுடன் அன்னியில், இந்தியர்களான நாம் வேறு எப்படிப் பேசக்கூடும்? இந்தியத் திலகர்களில் இவர்களும் வருகின்றார்களில்லையா? புத்தியின் மேன்மையினாலும், தங்கள் கீர்த்தியினாலும், செல்வத்தாலும் இவர்கள் நம் தேசத்தை சிறப்பித்திருக்கிறார்களென்பதை நாம் மிகுந்த களிப்புடன் ஏற்றுக் கொள்ளுகிறோம். எந்த அம்சத்திலும் தங்களைப்பார்க்கிலும் குறைந்தவர்கள் அல்லவென அவர்கள் மனதில் நன்றாக பதியும்படி செய்து, கர்வமுற்றிருந்த ஆங்கிலேயர்களிடமிருந்து பெரும் புகழையும் மரியாதையையும் பறித்த ஸர் டோரப் டாடா, லார்ட் ஸின்ஹா இவர்களை அபூர்வமான கௌரவத்துடன் நாம் எப்பொழுதும் கொண்டாடுவதில் சந்தேகமில்லை. ஆகிலும், சூரர்களுக்குப் பஞ்சமான இந்த காலத்தில் நம் தேசத்தின் நிலைமையை உத்தேசிக்கும் போது, காந்தியைப் போலொத்த ஒருவனை இப்பெரிய ஸ்ரீமான்களைக் காட்டிலும் நூறுமடங் கதிகமாக நாம் மதிக்கின்றோம்.

ஸர் ஹென்ரி வில்ஸன்

சில வருஷங்களுக்கு முன் நடந்த மகாயுத்தத்தில் தனது புத்தியால் பேருதவி புரிந்த ஸர் ஹென்ரி வில்ஸன் என்னும் போர்வீரர் சென்ற வாரம் லண்டனில் சுடப்பட்டார். காரணம் என்னவென்றால் இங்கிலண்டுக்கும் அயர்லண்டுக்குமுள்ள மனஸ்தாபங்களே. சமீபத்தில் நடந்ததோர் உடன்படிக்கையால் அயர்லண்டுக்கு சுய ஆட்சி சுதந்திரம் கொடுக்கப்பட்டிருந்தாலும், டி. வாலிரா என்பவரால் ஆளப்பட்டுவரும் ரிபப்ளிகன் கட்சியார் சிறிதும் சமாதானமடையவில்லை. சென்ற வாரம் அயர்லண்டில் நடந்த ஜெனரல் எலெக்ஷனில் டி. வாலிரா பக்கத்தார் தோல்வியடைந்த போதிலும், அயர்லண்டுக்கு முழுமையும் சுவாதீனம் சம்பாதித்து வைக்கவேண்டுமென்ற தீவிரமான எண்ணம் சற்றும் குறைந்ததாகத் தெரியவில்லை. ஸர் ஹென்ரி வில்ஸன் இப்போது சுடப்பட்டதற்கு ராஜாங்க மனஸ்தாபமே காரணமென வெளியாகின்றது. கொஞ்ச காலமாய் லண்டனில் போலீஸார் மந்திரிகளைப் பாதுகாத்து வந்தார்கள். அப்படியிருந்தும் இவர் கொலையுண்டது அதிசயமாயிருக்கின்றது. இவரை சுட்டு வீழ்த்தினவர்களும் மிகுந்த தைர்யத்துடனும் அஞ்சாத நெஞ்சுடனும் நடந்திருக்கிறார்கள். வெளியிலிருந்து தன் வீட்டிற்குத் திரும்பிவந்ததும் இவருக்கு இக்கதி நேர்ந்தது. ரிவால்வர் சப்தம் கேட்டவுடன் தனது கத்தியை இவர் உடனே உருவினதாகச் சொல்லுகிறார்கள். இவரது மனைவியார் அவ்வாரவாரத்தைக் கேட்டு இவர் இருக்குமிடம் வந்து சேருமுன், உயிர் துறந்தார். உடனே போலீஸாருக்குட் டெலிபோன் மூலமாய் சமாசாரம் அனுப்பப்பட, அவர்கள் விரைந்து ஓடிவந்தார்கள். கொலை பாதகர்களை போலீஸார் பிடித்தது நிரம்பவும் வியக்கத்தக்கதே.

பார்லிமெண்டில் இதைப்பற்றிப் பெரிதான வாக்குவாதம் நடந்தது. இச்செய்தியை அறிந்ததும் திடுக்கிட்டுத் திகைக்காதவர்கள் ஒருவருமில்லை. பிரிடிஷ் பிரதம மந்திரியாயிருக்கும் லாயிட் ஜியார்ஜ் மந்திரிகளின் ரக்ஷணைக்காகப் போலீஸாரிடம் ஆலோசித்துக்கொண்டிருப்பதாய் பார்லிமெண்டில் தெரிவிக்கப்பட்டது. அடுத்த திங்கள்கிழமை, அதாவது ஜூன் 26உ யன்று, பார்லிமெண்டில் இவ்விஷயத்தைப்பற்றிய விவாதம் நடக்குமென மிஸ்டர் சேம்பர்லெயின் தெரிவித்தார். எங்கும் மிகுந்த கவலை பாராட்டப் படுகின்றது.

ராஜாங்க விஷயமாக இப்படிக் கொலை செய்வதென்றால், இதற்கொரு போதும் எல்லையில்லை. சென்ற சில வாரங்களுக்குள் ஐரோப்பாவில் இம்மாதிரியாக மூன்று கொலைகள் செய்யப்பட்டிருக்கின்றன. ஜர்மனியில் ஏர்ஸ்பர்கர் என்பவர் இப்படியே சுட்டு வீழ்த்தப்பட்டார். அது கெயிஸர் கட்சியார் செய்த மகா பாபங்களில் ஒன்று. ராஜாங்க மனஸ்தாபங்களுக்காக ஒருவருக்கொருவர் இப்படிக் கொலை செய்து கொள்வது வெட்கக்கேடு. அயர்லண்டிலுள்ள ரிபப்ளிகன் கட்சியார் தங்களுடைய தூண்டுதலால் இது நடக்கவில்லையென்று பகிரங்கப்படுத்தியிருக்கிறார்கள். பிரான்ஸிலும் அமெரிக்காவிலும் ஜர்மனியிலும், இதைப் பற்றி வருத்தப்படாதவர்கள் இல்லை. ஐரோப்பிய மகாயுத்தம் நடந்தகாலத்தில் பிரான்ஸுக்காக மிகவும் உழைத்த ஸர் ஹென்ரி வில்ஸன் தனது அகால மரணத்தால் அத்தேசத்தில் ஓர் பெரிதான அநுதாபத்தை உண்டாக்கிவிட்டார். இந்த சம்பவத்தால் இங்கிலண்டுக்கும் அயர்லண்டுக்கும் நடந்த உடன்படிக்கையால் ஏற்பட்டிருக்கும் அமைதி குறைந்து விடுமோ என்று பயப்படக் காரணமுண்டு. லண்டனிலுள்ள பெரிய பத்திரிகைகளில், கேவலம் பீதியடைந்து முன்பின் யோசிக்காமல் ஒன்றும் செய்யலாகாதென சொல்லப்படுவது நமக்கு சந்தோஷத்தை யளிக்கின்றது. இதுகாறும் செய்யப்பட்ட பரிசோதனையில் இவருடைய மரணத்திற்கு மகத்தான கலகங்கள் வேறு ஒன்றும் காரணமில்லையெனத் தெரிகின்றது. ஸர் ஹென்ரி வில்ஸனின் உடல் சகல மரியாதைகளுடனும் ஸெயின்டு பால்ஸ் ஆலயத்தில் புதைக்கப்படும். மாட்சிமைதங்கிய ஜார்ஜ் அரசருக்காக காஸுட் ட்யூக் அத்துக்கக் கொண்டாட்டத்தில் வந்திருப்பார்.

சித்திரா

ஸீன் 7

மன்மதன்—இன்றிரவு உன் கடைசி இரவாகும்.

வசந்தன்—உன் தேகத்தின் சௌந்தரியமானது வசந்தருதுவின் என்றும் வற்றாத செல்வக் குவியலை நாளைச் சென்று மீண்டும் சேர்ந்துவிடும். அர்ச்சுனனின் முத்தங்களினடையாளத்தினின்றும் பிரிவுற்றதாய் உன்னுடைய அதரங்களின் அழகிய சிவப்பானது இரு அசோகத்துளிர்களாகப் புதிதாய் மறுபடியும் உண்டாகும். உன் சரீரத்தின் இம்மிருதுவான வெண்ணிறமும் எண்ணிறந்த மல்லிகை மலர்களாக மாறிவிடும்.

சித்திரா—ஐயா! எனக்கு இந்த வரத்தை மட்டும் அளியுங்கள். இன்றிரவின் முடிவில், அணையும் நெருப்பு கொழுந்து விட்டெரிவதேபோல், என் சௌந்தரியமும் இன்னும் அதிகமான சிறப்புடன் பிரகாசிக்கட்டும்.

மன்மதன்—உன் விருப்பம் நிறைவேறுமாக!

ஸீன் 8

ஜனங்கள்—ஐயோ! எங்களைக்காப்பாற்ற ஒருவரையும் காணோமே.

அர்ச்சுனன்—என்? உங்களை என்ன ஆபத்துச் சூழ்ந்திருக்கின்றது இப்பொழுது?

ஜனங்கள்—எங்கள் கிராமத்தைக் கொள்ளையடிக்கக்கள்ளர்கள் வடத்திசை மலைகளிலிருந்து ஒரு அருவி வெள்ளம்போல் வந்து குவிந்திருக்கிறார்கள்.

அர்ச்சுனன்—இவ்விராஜ்யத்தில் உங்களைப்பாதுகார்க்க ஒருவரும் ஏற்படுத்தப்படவில்லையா?

ஜனங்கள்—அகிருத்தியம் செய்வோரையெல்லாம் எங்கள் ராஜகுமாரி சித்திரா நடுக்கமுறச் செய்துகொண்டிருந்தாள். அவள் இங்கிருக்கும் பொழுது நாங்கள், எங்கள் ஆயுட்காலம் முடிந்து மரிக்கும் பயத்தைத் தவிர வேறு பயமொன்றையும் அறியோம். அவள் இப்பொழுது தேச சஞ்சாரம் செய்யப் போயிருக்கிறாள். எங்கிருக்கிறாளென்பது ஒருவருக்கும் தெரியாது.

அர்ச்சுனன்—இத்தேசத்தைப் பாலிப்பவள் ஒரு ஸ்திரீயா?

ஜனங்கள்—ஆம். அவளே எங்கள் தாயும் தந்தையும் போன்றவள். (போகிறார்கள்)

சித்திரா வருகிறாள்.

சித்திரா—தாம் தனியாய் உட்கார்ந்திருப்பதேன்?

அர்ச்சுனன்—ராஜகுமாரியான சித்திரா வென்பவள் எப்படிப்பட்டவளென்பதை என் மனதால் யோசித்துப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். பலவித மனிதர்களிடமிருந்து அவளைப்பற்றி அநேக விஷயங்கள் என் காதுகளில் விழுகின்றன.

சித்திரா—அப்படியா? ஆனால் அவள் சௌந்தரியம் பொருந்தியவளல்ல. என்னுடையவை போன்று, கருத்து பிரகாசம் பொருந்திய அழகிய கண்கள் அவளுக்கில்லை. எதையும் குறி பார்த்து அவள் எய்ய வல்லவளாயினும், என் பெருமை பொருந்திய வீரசிம்மத்தின் ஹிருதயத்தைப் புண்படுத்தும் அம்பு அவளிடம் கிடையாது.

அர்ச்சுனன்—தைர்யத்தில் அவள் ஒரு புருஷனையும், ஆதரவில் ஒரு ஸ்திரீயாயுமிருப்பதாய்ச் சொல்லுகிறார்கள்.

சித்திரா—உண்மையாய் அதொன்றுதான் அவளுடைய பெரிய துர்பாக்கியமென்று கூறவேண்டும். ஒரு ஸ்திரீ எப்பொழுது கேவலம் ஒரு ஸ்திரீயாய்த் தன் புன்னகையாலும், கண்ணீராலும், பணிவிடைகளாலும், அன்பு நிறைந்த இனிய சொற்களாலும் புருஷர்களுடைய ஹிருதயங்களைக் கொடி சுற்றிக்கொள்ளுவதுபோல் நன்கு சுற்றிக் கொள்ளுகிறாளோ, அப்பொழுதுதான் அவளுக்குச் சந்தோஷமுண்டாகும். வித்தையும், சக்தியும் அவளுக்கென்ன பிரயோஜனத்தை யளிக்கப் போகின்றன? அக்காட்டு மார்க்கத்திலுள்ள சிவன் கோவிலில் நேற்றுமட்டும் அவளை நீர் பார்த்திருந்தால், சிறிதும் கண்ணெடுத்துப் பார்க்காமலே சென்றிருப்பீர். ஆயினும், ஒரு ஸ்திரீயினிடம் புருஷபலத்தை நாடும் வண்ணம், அழகைப்பற்றித் தாம் இவ்வளவு சீக்கிரம் சலிப்படைந்தது எதற்காக?

இரவுபோல் இருள் சூழ்ந்த ஒரு குகையில், மலையருவியின் ஜலத்துளிகளால் நனைந்த பசுமையான இலைகளுடன் நான் நமக்குப் படுக்கை சித்தம் செய்திருக்கின்றேன். அங்கு, நனைந்திருக்கும் கல்லின்மேல், அடர்ந்து படர்ந்து மிருதுவாய்ப் பச்சென்றிருக்கும் பாசியின் குளிர்ச்சியானது வெகு சீக்கிரம் தம்மை உறங்கச்செய்யும். வாரும், அழைத்துப்போகிறேன்.

அர்ச்சுனன்—கண்ணே! இன்றைக்கு வேண்டாம்.

சித்திரா—ஏன் இன்றைக்கு வேண்டாம்?

அர்ச்சுனன்—கள்ளர் கூட்டமொன்று ஊரை யழிக்க வந்திருப்பதாய்க் கேள்வியுற்றேன். நான் போய் அவ்வச்சமுற்றிருக்கும் ஜனங்களை ரக்ஷிக்க என் ஆயுதங்களைத் தயார் செய்யவேண்டும்.

சித்திரா—தாம் அவர்களைப்பற்றிக் கவலைப்படவேண்டிய அவசியமில்லை. தன் தேச சஞ்சாரத்திற்குப் புறப்படுவதற்கு முன்னமேயே ராஜகுமாரி சித்திரா அதற்குத் தகுந்த காவல்கள் ஏற்படுத்தி விட்டுச் சென்றிருக்கிறாள்.

அர்ச்சுனன்—ஆயினும், ஒரு க்ஷத்திரியனுக்குரிய கருமத்தைச் செய்ய நீ சிறிது உத்திரவு கொடுக்க வேண்டும். இவ்வேலையன்றியிருக்கும் கரத்திற்கு நான் புதிய வோர் புகழை யுண்டாக்கி உன் தலையைத் தாங்குவதன்பொருட்டு இன்னும் சற்று தகுதியுள்ளதாகச் செய்வேன்.

சித்திரா—ஆனால், தம்மைப் போகவிடாமற் தடுத்து நான் என் கைகளில் இருத்திப்பிடித்துக் கொண்டால்? திமிறி விடுவித்துக்கொண்டு என்னை விட்டுச் செல்வீரோ? அப்படியானாற் செல்லும். நானொன்றும் கூறவில்லை. ஆனால், ஒருதரம் ஒடிந்துபோன கொடியானது (the liana) மீண்டும் ஒன்று சேராதென்பதைத்தாம் அறியவேண்டும். உம்முடைய தாகம் தணிந்துவிட்டதாயின் நீர் செல்லுவதில் எனக்கொரு ஆக்ஷேபணையுமில்லை. ஆனால் அது தணிவதற்குமுன் சென்றால், இன்பத்தின் அதிதேவதையானவள் சஞ்சலபுத்தியுள்ளவளென்பதும், ஒரு மனிதனின் வரவிற்கும் காத்திருக்கப்பட்டவளல்லவென்பதும் உமக்கு ஞாபகமிருக்கட்டும்......................சற்று கீழே உட்கார்ந்து என்ன எண்ணங்கள் உம் மனவமைதியைக் கலைக்கின்றன வென்பதைக்கூறும். தம்முள்ளத்தில் இன்று புகுந்திருப்பது யார்? சித்திராவென்னும் பெண்மணியா?

அர்ச்சுனன்—ஆம். அவளைப்பற்றித்தான் நான் நினைத்துக்கொண்டிருக்கிறேன். என்ன விரதத்தை முடிப்பதன்பொருட்டு அவள் தேசசஞ்சாரம் செய்யப்போயிருக்கிறாள்? அவளுக்கென்ன குறைவிருக்கக்கூடும்?

சித்திரா—என்ன குறைவா? ஐயோ பாபம்! அத்துற்பாக்கியமுள்ள பெண்ணுக்கு என்ன சந்தோஷம்தானிருக்கிறது? அவளுக்குப் பெருமையளித்திருக்கும் உயர்ந்த குணங்களே ஒரு சிறைக்கூடம்போன்று அவளது ஹிருதயத்தைச் சிறைப்படுத்தியிருக்கின்றன. அவள் பெண்மையானது மிகவும் சிறுமையை யடைந்திருப்பதுடன்தான் விரும்பியவற்றையும் அடையக்கூடாமலிருக்கின்றது. தன் வெறுமையைக்கண்டேதான், அவள் கொண்டிருக்கும் காதல் திருப்தியை அடையவேண்டும். சௌந்தரியத்தை ஈசுவரன் அவளுக்களிக்கவில்லை. இருண்ட மேகக்கூட்டங்களினால் தன் பிரகாசத்தை யிழந்து, ஒரு குன்றின் சிகரத்தின் மீது தோன்றும், ஒளி குன்றிய காலைத்தேவதையொருவள்போல் அவள் விளங்குகிறாள். அவளுடைய வரலாற்றைப்பற்றித்தாம் என்னைக்கேட்கவேண்டாம். ஒரு புருஷனுடைய காதுகளுக்கு அது ஒருபோதும் இனிமையை யளிக்காது.

அர்ச்சுனன்—அவளைப்பற்றி எல்லாச் சங்கதிகளையுமறிய எனக்கு மிகுந்த ஆவலாயிருக்கிறது. நடுநிசியில் ஒரு புதிய நகரத்திற்கு வந்து சேரும் பிரயாணி யொருவனைப்போல் நான் தோன்றுகிறேன். கூடங்கள், கோபுரங்கள், உபவனங்கள் முதலியவை யாவும் இருட்டில் மங்கித்தோன்ற நிச்சப்தமான நித்திரையின் மத்தியில் சமுத்திரத்தின் அடங்கிய ஓசையும் மெதுவாய்க் கேட்டுக்கொண்டே யிருக்கும்பொழுது, இவ்வத்புதங்களை யெல்லாம் கண்டுகளிக்க அவனும் சூரியோதயத்தை ஆவலோடு எதிர்பார்ப்பானல்லவா? எனக்கு அவளைப்பற்றி முழுவதும் சொல்.

சித்திரா—அவளைப்பற்றிக் கூறுவதற்கு இனி ஒரு விசேஷமுமில்லை.

அர்ச்சுனன்—ஒரு வெண்புரவியின்மீது ஏறிக்கொண்டு அதன் கடிவாளத்தைக் கம்பீரமாய்த் தனது இடதுகையிற் பற்றியவளாய், வலது கரத்தில் ஒரு வில்லை யேந்தி ஜயத்தின் அதிதேவதைபோன்று சுற்றிலுமிருப்பவர்களுக்குச் சந்தோஷத்தையும், நம்பிக்கையையும் அளித்துச் செல்பவளாக அவள் என் மனக்கண்முன் தோன்றுகிறாள். தன்னிடம் பால்குடித்துக் கொண்டிருக்கும் இளங்குட்டிகளை ஒரு பெண் சிங்கம் எவ்விதம், ஒன்றும் கிட்ட அணுகாவண்ணம் அதிஜாக்கிரதையுடன் கார்க்குமோ, அவ்விதமே அவளையும் நான் எண்ணுகிறேன். ஆபரணங்களொன்று மணியாது வெறும்பலத்தோடு மட்டும் விளங்கினும், ஒரு ஸ்திரீயின் கரங்கள் மிகுந்த அழகுள்ளவைகளாகவே தோன்றும். கண்ணே! மழைக்காலம் சென்றபிறகு தன் நீண்ட தூக்கத்தினின்றும் கிளம்பியெழும் சர்ப்பம்போல் என் மனம் அமைதியற்றிருக்கின்றது. வா, நாமிருவரும் அதிவேகமாய்ச் செல்லும குதிரைகளின்மேல் விண்ணிலுலாவும் இரு நக்ஷத்திரங்களென சஞ்சரிப்போம். இவ்வுறக்கத்தைத்தரும், எங்கும் பசுமையாய்க் குளிர்ந்த நிழலையுடைய சிறைச்சாலையை—மூச்சைத் திணறச்செய்கின்ற இச்சுற்றிலும் ஒரே வாசனை அடர்ந்து கமழும் உன்மாதத்தை—நாம் விட்டகன்று செல்வோம் வா.

சித்திரா—அர்ச்சுன ராஜனே! உண்மையாய்ச் சொல்லும். இப்பொழுது நான் ஏதாவது மந்திர சக்தியினுதவியினால், இக்காமோத்தீபகமான மிருதுத்தன்மையை—அதிகமாக ஸ்பரிசித்தாலும் வாடிவதங்கும் குணமுடைய இச்சௌந்தரியத்தை எனக்குச் சொந்தமல்லாததான ஆடையைக் களைந்தெறிவதுபோல் என்சரீரத்தினின்றும் அகற்றிவிட்டேனாயின்,. தாம் அதைப் பொறுக்கக்கூடுமா? அபலையான மங்கையரின் விலாஸங்கள் யாவையும் துச்சமாக நினைத்து சற்றும் அஞ்சாத நெஞ்சத்துடன் நான் இப்பொழுது கம்பீரமான உயர்ந்த உருவத்துடன் தம் முன் நின்றால்,—இனி, பூமியின்மீது துவண்டு புரளும் மெல்லிய கொடிபோலல்லாமல் ஒரு இளம் வன விருட்சமென நிமிர்ந்த தலையுடன் தோன்றினால்—ஒரு புருஷனின் கண்கள் என்னைக் கண்டுகளிக்க முடியுமா? இல்லை. இல்லை. தாம் அதை ஒருபோதும் பொறுக்கமாட்டீர். நிலையற்ற யௌவனத்தின் விலாசங்களை நான் என்னைச் சுற்றிலும் பரவச்செய்து பொறுமையுடன் தமக்காகக் காத்திருப்பதே நலமென்றெண்ணுகிறேன். எப்பொழுது தமக்கு என்னிடம் திரும்பி வரவேண்டுமென்னும் விருப்பமுண்டாகுமோ, அப்பொழுது நான் சந்தோஷ முகத்துடன் இவ்வழகிய சரீரமாகிய கிண்ணத்தில் இன்ப மதுவைத் தமக்கு நிரப்பித்தருவேன். தெவிட்டடையும் மட்டும் அதை அருந்திச் சலிப்புற்ற பிறகு தாம் தமது காரியத்தின் பொருட்டுச் செல்லலாம். அப்புறம் கிழத்தன்மை என்னை வந்தடையும் பொழுதும், தாம் எவ்விடம் என்னைவிட்டு வைத்தாலும், அவ்விடத்திலேயே நான் நன்றியுடனும் தாழ்மையுடனும் நாட்களைக் கழிப்பேன். இரவில் உமது விளையாட்டுத் தோழியா யிருப்பவள் பகலிலும் தம் துணைவியாயிருக்கும் உயர்ந்த பதவியை யடைய விரும்பினால் — பெருமையுற்றிருக்கும் வலது கரத்தின் பாரத்தைப் பகிர்ந்துகொள்ள

இடது காமும் கற்றுக்கொண்டால் தமதுள்ளத்திற்கு அது திருப்தியை விளைவிக்கக் கூடுமா?

அர்ச்சுனன்—உன்னைச் சரியாய் ஒருபோதும் நான் அறிய முடியவில்லை. ஒரு பொன் பதுமையில் மறைந்திருக்கும் தேவதைபோல் நீ என் கண்ணுக்குத் தோற்றுகிறாய். உன்னை ஸ்பரிசிக்கவாவது, உன்னுடைய விலைமதிக்கத் தகாத பரிசுகளுக்குப் பதிற் கைம்மாறு செய்யவாவது என்னால் கூடவில்லை. இவ்விதமாக என் காதல் பரிபூர்ணமாகாமலிருக்கின்றது. சில சமயம் உன்னுடைய விசனகரமான பார்வையில் தம்முடைய அர்த்தத்தையே பரிகசிப்பது போன்றிருக்கும் உனது வேடிக்கைப் பேச்சுகளில், காம அனலைக் கிளப்பக் கூடிய தன் சரீர சௌந்தரியத்தினின்றும் விடுபட்டு, புன்னகையாகிய மெல்லியபுகை நாற்புறமும் சூழ, இம்மானிட வாழ்க்கையின் துன்பங்களாகிய அனலினின்றும் பரிசுத்தையாய்க் கிளம்பி யெழமுயலும் ஒருவளைக் காண்பதுபோல் எனக்குத் தோன்றுகிறது. மாயையானது ஸத்தியத்தின் முதற் தோற்றமாம். தன் காதலனிடம் அவள் உருமாறிச் சென்று தன்னன்பை வெளிப்படுத்துகிறாள். ஆயினும், தன் மேனியை மறைக்கும் வஸ்திரத்தையும் ஆபரணங்களையும் எடுத்தெறிந்துவிட்டு சுபாவமான தன் காம்பீர்யத்துடன் அவள் தன்னை வெளியிடும் காலமும் வரும். அம் முடிவில் விளங்கும் ஒளி மறைவற்ற அவ்வுண்மையைத் தேடி யறியவே நான் இப்பொழுது முயலுகிறேன்.

என் அன்பே! ஏன் உன் கண்களில் நீர் ததும்புகின்றது? உன் முகத்தைக் கைகளால் எதற்கு மூடிக்கொள்ளுகிறாய்! என் கண்மணியே! உன்னை நான் வருத்தத்திற்குள்ளாக்கி விட்டேனோ? நான் கூறியதை மறந்துவிடு. இப்போதுள்ளவைகளுடனேயே நான் திருப்தியடைந்து விடுவேன். உன் சௌந்தரியமானது ஒவ்வொரு நிமிஷமும் விருத்தியடைந்து, இருளில் பிறர் கண்ணுக் ககப்படாத தன் கூட்டினின்றும் வெளிப்படும் ஒரு மாயப் பறவைபோல், இனிமையான சங்கீதத்தையே சநதேசங்களாக என்னிடம் கூறட்டும். ஒரு காலத்தில் இவ்விரகசியத்தினுண்மையை அறிந்து விடுவேனென்னும் நம்பிக்கையுடன், எப்பொழுதும் உன்னுடன் நான் என் வாழ்நாட்களைக் கழிக்கும்படிச் செய்.

ஸீன் 9

சித்திராவும் அர்ச்சுனனும்

சித்திரா ஒரு போர்வையால் தன் தேகம் முழுவதும் மறைக்கப்பட்டிருக்கிறாள்

சித்திரா—பிராணநாதா! ஒரு துளியும் மீதியிலாமல் தாம் கிண்ணத்திலிருக்கும் மது யாவற்றையும் அருந்தியாயிற்று? உண்மையாய் இன்பகாலத்தின் முடிவு இதுவோ? அல்ல. யாவும் முடிந்த பிறகு கடைசியாய்நிறைவேற வேண்டுவதொன்று பாக்கியிருக்கின்றது. இது தான் நான் தமது பாதக்குடியில் புரியும் கடைசித்தியாகமாம்.

என் ஹிருதயேசுவரா! ஸ்வர்கத்திலிருக்கும் உபவனத்திலிருந்து உம்மை அர்ச்சிக்க ஒப்புயர்வற்ற அழகுடைய புஷ்பங்களை நான் கொண்டுவந்தேன். அப்பூஜை முடிந்து அம்மலர்கள் வாடிவிட்டதாயின் இனி அவ்வாலயத்தினின்றும் அவைகளை நான் வெளியிலெறிந்து விட்டாலென்ன? (தன் மேற்போர்வையைத் தள்ளித் தன் சொந்த புருஷவேஷத்தை வெளியிட்டு) ஏதோ உம்மைப் பூஜிப்பவளைச் சற்று கருணையுடன் பாரும்.

நான் தூய மலர்களைப்போல் அவ்வளவு தூய்மையும் அழகும் என்னிடமில்லை. பலகுறைவுகளும், களங்கங்களும் என்னிடமுள்ளன. இவ்விசாலமான உலகின்கண் பிரயாணம் செய்பவள் நான். என் வஸ்திரங்கள் அழுக்கடைந்தும், முட்களினால் கீரப்பட்டு என் பாதங்கள் ரத்தத்தைச் சிந்தியும் தோன்றுகின்றன. களங்கமற்ற, ஒரு நிமிஷ வாழ்க்கையின் சௌந்தரியத்துடன் கூடிய புஷ்பத்தினழகை நான் எங்கு சென்று பெறுவேன்? பெருமையுடன் தமக்கு நான் அளிக்கும் வெகுமதியானது ஒருஸ்திரீயின் உள்ளமேயாம். இம்மண்ணுலகிற் பிறந்த பெண்ணொருவளுக்குள்ள சந்தோஷம், துக்கம் நம்பிக்கை, பயம், மானக்கேடு இவையாவும் இவ்விடத்தில் ஒன்று சேர்ந்திருக்கின்றன. என்றும் அழிவற்ற வாழ்க்கையை யடைய விரும்பித்தவிக்கும் மெய்யன்பும் இங்குண்டாயிருக்கிறது. முழுவதும் மாசற்றதான ஜன்மமல்லவாயினும், அது பெருந்தன்மையும் கம்பீரமுமுள்ள தென்பதைத் தாம் இங்கு காண்பீர். இப்புஷ்பார்ச்சனை முடிந்து விட்டால், இனி இவளை பின்வரப்போகும் நாட்களின் பொருட்டுத் தமது ஊழியக்காரியாக ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

சித்திராவென்னும் ராஜகுமாரி நானே. அச்சிவன் கோவிலில் ஒரு நாள், பல அழகிய ஆடையாபரணங்களை வாரியணிந்து ஒருபெண் தம்மிடம் வந்தது ஒருக்கால் தமக்கு நினைவிருக்கலாம். ஒரு புருஷனைப்போல் அங்நாணமற்ற ஸ்திரீ உம்மை வசீகரிக்க விரும்பினாள். ஆனால் நீர் அவளை மறுதலித்தீர். அதற்கு அவளேற்றவளே. நாதா! அப்பெண் நான் தானென்பதை யறிவீரா? அவள் என்னுடைய உருமாறிய வேஷமாவாள். பிறகு ஒரு தெய்வவரத்தால் மானிடஜாதியிலிதுவரையும் யாரும் கண்டறியாத பிரகாசம் பொருந்தியரூபலாவண்யத்தை ஒருவருஷகாலம் பெற்று, அச்சதிமோசத்தின் பாரத்தைத் தாங்க இயலாது எனது வீர சிம்மத்தினுள்ளத்தை சோர்வடையச் செய்தேன். ஆயினும் நிச்சயமாய் அப்பெண் நானல்ல.

என்பெயர் சித்திரா. நான் பூஜைக்குருகையான ஒரு தேவதையுமல்ல. மற்றும் அசட்டையாய் உதறியெறியத் தகும் துரும்பென யாவரும் கண்டு அனுதாபப்படக் கூடியவளுமல்ல. ஆபத்துக்களிலும், கஷ்டங்களிலும் என்னைத் தம் பக்கலில் துணையாய்க் கொள்ளத் தாம் மனமுவந்தால், தமக்கு விதிக்கப்பட்டுள்ள உயர்ந்த கடமைகளை நானும் பகிர்ந்துகொள்ள நீர் அனுமதி யளித்தால் அப்பொழுது என்னை முற்றிலும் அறிந்தவராவீர். என் கர்ப்பத்தில் நான் வளர்க்கும் சிசு புத்திரனாகப்பிறக்குமாயின், இரண்டாவது அர்ச்சுனனெப் பெயரெடுக்கும்படி நானே அவனுக்கு யாவையும் கற்பித்துத் தகுந்தகாலம் வரும்பொழுது தம்மிடம் அனுப்புவேன். கடைசியாய், அப்பொழுது என்னைப்பற்றிய சகல உண்மையையும் தாம் அறிந்துகொள்வீர். இன்றையதினம் ஒரு அரசனுடைய குமாரியான சித்திரா வென்பவளை மட்டுமே நான் உமக்கு அளிக்க முடியும்.

அர்ச்சுனன்—கண்ணே! என் ஜன்மம் இன்றே ஈடேறிற்று.

பண்டித மோதி லால் நேரு

சென்ற ஜூன் மாதம் 16உ அலகாபாதில் கூடிய ஏராளமான ஜனங்களின் முன்னிலையில் பண்டித மோதிலால் நேரு செய்த பிரசங்கத்தின் விஷயங்கள் மிகவும் கவனிக்கத்தக்கன. அவற்றை இங்கு சுருக்கமாகச் சொல்வோம். சிறையிலிருந்து விடுபட்ட ராஜீய கைதிகள் சிறைவாஸம் செய்து கொண்டு வருவோர்களைக் கண்டுபேச இடங்கொடுக்கக் கூடாதென்ற ஓர் உத்திரவை கவர்ன்மெண்டார் விடுத்து, தான் விடுதலை அடைந்தபிறகு தன்

புத்திரனைப் பார்க்கக்கூடாமலிருப்பதைப்பற்றி நேரு அவர்கள் வருந்துகின்றார். ஓர் தகப்பனார் தன் குமாரனைக்காணவொட்டாது தடுக்கப்படுவதைக் காட்டிலும் மனதிற்கு துன்பத்தைக் கொடுக்கக்கூடியது வேறு ஏதேனும் உளதோ. அவரும் அவர் புத்திரரும் வேட்டையாடுவது வழக்கமாயிருந்தும், அவர்கள் ஆயுதம் தரிக்க அநுமதி பெற்றிருந்ததை ரத்து செய்து, ஆயுதங்களை மாஜிஸ்ட்ரேட்டிடம் ஒப்புவிக்கும்படி கட்டளை இடப்பட்டனர். சாதாரணமாய் ஆயுதம் தரிக்க உரிமை எவர்களுக்கு கொடுபடாது என்பது யாவரும் அறிந்த விஷயம். நேரு அவர்கள் எவ்விதத்தில் ஆயுதம் தரிக்கத் தகாத ஓர் ஆபத்தான மனிதராக கருதப்பட்டாரோ? சிறை வாஸத்தில் அவர் வெகு தயையுடனும் மரியாதையுடனும் கவனிக்கப்பட்டார். பல பெரிய உத்தியோகஸ்தர்கள் அவரை சிறையில் காணவந்து அவருக்கு வேண்டிய சௌகரியங்களைப்பற்றி விசாரித்துப்போயினர். அவருக்கு உணவு, படுக்கை, இருப்பிடம் யாவற்றும் சௌகரியமாயிருக்கும்படியே அளிக்கப்பட்டன. சிறையிலிருந்து வெளி வந்தவுடன் இந்த இரு உத்திரவையும் காணுங்கால், மனம் நொந்தவராய் முதலில் நன்றாகப் போஷிக்கபபட்டு பிறகு மனிதன் உணவுக்கிரையாக வெட்டப்படும் ஆட்டுக்கு சமமான நிலையில் வருத்தமுறுகின்றார். சிறையில் எவ்வித கஷ்டங்களுக்குட் படவும் தயாராயிருந்தவருக்கு அங்கு யாது கஷ்டமும் கொடுக்காது, வெளிவிட்ட பிறகு மனதிற்கு சகிக்கமுடியாத துன்பங்களைச் செய்கின்றனரே. ஒரு சமயம் இப்படிப் பட்ட கைதிகளுக்கு சிறைவாஸம் முடிந்த பிறகும் தண்டனை யிடப்பட வேண்டுமென கவர்ன்மெண்டார் கருதினர் போலும்.

இந்நாட்களில் ஸர்வாதிகாரம் புரியும் உத்தியோகஸ்தர்கள் அநேகம். இவ்வதிகாரங்கள் சட்டப்படி அளிக்கப்படாது அவர்களாக வழக்கத்தில் கைக்கொண்டிருக்கிறார்கள். ஏதாவது பத்திரிகைகளில் இவர்களைப் பற்றி குறைகள் வெளிவந்தால் நடப்பது யாதெனில், விளம்பர (publicity) ஆபீஸர் இதைக்குறித்துக் கொண்டு அவ்வுத்தியோகஸ்தருக்குத் தெரிவிக்கிறார். அந்த உத்தியோகஸ்தர் அக்குறைகளை மறுத்து விளம்பர ஆபீஸரால், பிறகு அம்மறுப்பே பெரிய மதிப்புடன் வெளியிடப்பட்டு வருகின்றது. இந்தியர்களுக்கு தங்களை ஆண்டு கொள்ள சக்தியில்லையெனவும் ஆகையால் சுயராஜ்யம் ஒரு நாளும் சித்திக்காதென்றும் சொல்லப்படுகிறது. அது எவ்வித மிருந்தும், சுயராஜ்ய அரசாங்கத்தில் ஓர் உத்தியோகஸ்தரைக்குறித்து குறை கூறினால் அதற்கு அவருடைய மறுப்பையே ஆதாரமாகக் கொண்டு நீதி நடைபெறாது; அங்கு சாதாரண போலீஸ் சேவகனை உண்மையுள்ளவனாகவும், மோதிலால் நேருவை குற்றவாளி ஜாதியில் ஒருவராயும் கணிக்கப்பட மாட்டாது.

சிறையில் கைதியா யிருப்பவரைக் காணப்போகும் எம்மனிதரும் முதலில் சோதிக்கப் பட்டே உள்ளே செல்லுகின்றார். கௌரவத்தையே பெரிதாக மதிக்கும் மனிதர்கள் சோதிக்கப் படுவதற்கு இணங்குவாரோ. இதைக்குறித்தே பல ராஜ்யக் கைதிகள் தங்களைக்காண அவாவும் தம் நண்பர்கள் மானபங்கப்படுவதை விட காணவராமலிருப்பதே நலமென வெண்ணுகின்றனர். உத்திரவு எவ்விதமிருந்தாலும் நேரு அவர்களுக்கு புத்திரனைக் காண விடை அளிக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது. ஆயினும் நேரு அவர்கள் கவர்ன்மெண்டாரின் தயவை எதிர்பார்த்து நிற்கின்றாரோ! வெளிப்படையாக ஒத்துழையாதாரைக்கண்டிக்கும் கவர்ன்மெண்டார் ஒத்துழையாதாருடைய மனத்தூய்மையையும் உண்மையையும் அறியாரோ? அல்லாமல் ஏன் இக்கட்சியில் சேர்ந்து ராஜீயக்கைதியாயிருப்பவர்களை அவர்களுடைய நண்பர்களிலோ, உறவினர்களிலோ யாராவது ஒருவர் இக்கைதிகள் இனி ராஜீய வாதங்களில் தலையிடுவதில்லையென்பதை வாக்களித்தால் இவர்களை விட்டுவிடுவதாக சொல்லுகிறார்கள்?

ஒத்துழையாமை இயக்கம் பலிக்கவில்லை யென்று லீடர்போன்ற பல பத்திரிகைகள் கூறுகின்றன. ஒத்துழையா இயக்கத்தின் முக்கியமான ஆயுதமாய சாத்வீக சட்டமறுப்பு இதுவரை துவங்காதிருக்கையில் இவ்விதமுடிவுக்கு ஆதாரமே இல்லை. பலர் இந்தியஜன ராஜ்ய அமைப்பின் நியாயங்களையே கொண்டு முன்னேற்றத்திற்கு வழி தேடவேண்டும் என்கின்றனர். பிரான்ஸ், இங்கிலண்ட், அமெரிக்கா, இவ்விடங்களில் இருப்பது போன்ற ராஜீய அமைப்பு நம் தேசத்தில் உளதா. நம்தேசத்தில் இருக்கும் அரசாங்கம் இந்திய ஜன ராஜீய அமைப்பல்ல. காங்கிரஸ்ஸையே இவ்விதம் கூறலாம். இக்காங்கிரஸை நிராகரித்து சட்ட சபைகளின் மூலமாயே நலம்பெற வழிதேடும் நமது மிதவாத நேயர்கள் தங்களுக்கு இப்போது அளிக்கப்பட்டு வரும் கவனம் எங்ஙனம் ஏற்பட்டதென்று அறியாரோ ? ஒத்துழையாதார் என்ற ஓர் கட்சியினரை தாக்குவதற்கு கூடிய வரையில் வெளியில் உதவி நாடுவதற் கல்லவா இப்பிரிடிஷார் சட்டசபை மெம்பர்களைச்சற்று கொண்டாடுகின்றனர். இருந்தாலும் மிதவாதிகளும் தாங்கள் செய்து வருவதாகச் சொல்லும் உபகாரங்களுக்கு நன்றி செலுத்திவிட்டுக் கடைசியாக ஒத்துழையாமை இயக்கம் தன் லட்சியத்தை அடைந்துதான் ஒழியும் என்றும் ஓர் ஸமயம் நம் நாட்களிலேயே ஸ்வராஜ்யம் கிடைக்காவிடினும் நமக்குப்பின் வருவோர்களது காலத்திலாவது நடைபெறும் என்றும் சொல்லி முடித்தார்.

பலநாள் பெருந்திருடன்

ஹொரேஷியோ பாட்டம்லி என்பவன் இங்கிலாண்டில் ஓர் மஹா வியாபகனாயிருந்தான். இவன் அங்கு படுத்திய பூட்டுக் களவில்லை. இவனுடைய சரித்திரத்தைக் கேட்குங்கால் யாருமாச்சரியப் படுவார்கள். ஓர் பெரிய மனிதனென்றும் ஜனோபகாரி யென்றும், நிகரற்ற தேசபக்தனென்றும் இவன் நடித்த நடனத்தை நாம் என்னவென்று சொல்வது! 'இப்பகாத்திருடன், இப்பகாஸுரன், இம்மாயாவி, கடைசியில் அகப்பட்டுக்கொண்டான்,' என்று A. G. கார்டினர் என்ற ஓர் மகா புருஷர் தன்னையே அடக்கக் கூடாமல் நேஷன் என்னும் பத்திரிகையில் எழுதியிருக்கிறார். ஓர் பயங்கரமான பகற் கொள்ளைக்காரன் ஓர் அவதார புருஷனைப்போல் பாசாங்கு செய்வதையும், அவன் எங்கும் ஓர் புருஷ ஸிம்மம் என்று கொண்டாடப் படுவதையும், மானமுள்ள எவன் தான் சகிப்பான்? இவனால் ஏமாற்றப்பட்டவர்கள் எண்ணிக்கையில் அடங்காதவர்களே. யோக்கியர்களெல்லாம் இவனைக் கண்டு ஓர் பன்னிரண்டு வருஷகாலம் நடு நடுங்கினார்கள். இப்போது இவன் ஜெயிலுக்குள் கைதியாகி வெகு ஜாக்கிரதையாய் பூட்டப்பட்டு இருந்தாலும், அதையும் அவனைக் கண்டு பயந்தவர்கள் தற்காலத்தில் முழுவதும் நம்பமுடியவில்லை. ஜனங்களை மாத்திரம் ஒருவன் ஏமாற்றக்கூடுமே யாகில், அவன் மாயையில் அவர்கள் சிக்கிக் கொண்டிருக்கும் காலம் வரையில் அவனை ஒருவனும் எதிர்த்து நிற்கமுடியாது. இந்த தத்துவத்தை இவன் விஷயத்தில் தான் இங்கிலண்டில் பல ஸாத்விகர்கள் கண்ணுறக் கண்டார்கள். பதினாயிரக் கணக்கான ஏழை ஜனங்களின் கண்ணில் மண்ணைத் தூவி அவர்களுக்கு ஹிதத்தை செய்தவன் போலவே வெகுகாலமாய் இவன் கொள்ளையடித்து வந்தும், "இதோ, இத்திருடன்" என்று சொல்ல முடியாமல் எல்லோரும்

நுவித்திருக்கின்றார்கள். கடைசியாக ஓர் பயமற்ற பத்திரிகையின் முயற்சியால் தான் இவருடைய சரக்கு முழுவதும் வெளியாயிற்று. அப்பத்திரிகையின் ஆசிரியருக்கு 'நாம் என்னதான் செய்யக் கூடாது,' என, கார்டினர் என்பவர் எழுதுகின்றார். இவனால் துர்கதியடைந்த தௌர்பாக்கியசிரோமணிகளுக்கு ஒரு போதும் குறைவில்லை. சிலர் இவன் யோக்கியன் என்றே நம்பினார்கள். மற்றும் பலர், இவன் போக்கிரியாயிருந்தாலும் ஸாமர்த்தியசாலி யானதால் நமக்கும் இவன் சிநேகம் லாபகரமாயிருக்குமென்ற நிச்சயத்துடனிருந்தார்கள். ஆகினும், பெரும்பாலும் ஸாமான்ய ஜனங்கள் இவனை நன்கறியவில்லை. கேவலம் அறிந்திருந்தார்களே யாகில், ஓர் பிசாசிடமிருந்து ஒதுங்குவதுபோல் இவனை விட்டு உடனே விலகி யிருப்பார்களென்பதில் ஸந்தேகமில்லை. சென்ற முப்பது வருஷகாலமாக கொடுக்கல் வாங்கல் வியாபாரத்தில் மிகவும் தேர்ச்சியடைந்தவன்போல் இவன் பன்முறை மோசம் செய்து வந்தும் ஒருவன் கையிலும் பிடிபடாமலும் அதிர்ஷ்டவசத்தால் தப்பித்தே வந்துவிட்டான். இவன் அயோக்கியன் என்று சொல்லி, ஏழை ஜனங்கள் இவன் கையிலகப்பட்டுக் கொள்ளாமல் பாதுகாத்திருக்க வேண்டியவர்களே, இவனைத்தட்டிக் கொடுத்து, 'பேஷ்' எனச் சொல்லிவந்ததால் பாமரர்கள் இவனது குணத்தை ஒரு போதும் அறிய முடியவில்லை. பத்திரிகைகளிலும் நியாய ஸ்தலங்களிலும் இவனைப்பற்றி அடிக்கடி புகார்கள் வந்திருந்தும் இவனை ஒருவரும்அசைக்கக்கூடவில்லை. "கல் நெஞ்சு படைத்த கடுங் குற்றவாளியாகில், இவன் தண்டிக்கப் படாமல் இருக்கக் கூடுமா," என்றே, யாரும் மோகத்தால் மதிமயங்கி யிருந்தார்கள். அகப்பட்டுக் கொள்ளாமலிருந்ததுடன், நாட்டிலுள்ள பெரியோர்களால் கௌரவம் செய்யப்பட்டும், அணுகப்பட்டும், புகழப்பட்டும் வந்ததால் இவனைப் பற்றியுள்ள ஸந்தேகங்களெல்லாம் பறந்தே போயின. "என்ன, பார்லிமெண்டு மெம்பர்; அங்கே பேசும் போது இவன் சொல்வதை வேதவாக்காக மதித்து வருகிறார்கள்; என்ன நயம், என்ன வாக்கு, என்ன சக்தி, என்ன பௌருஷம்," என்ற மாயையால் எல்லோரும் சித்தம் கலங்கி யிருந்தார்கள். போலீஸாரின் கையில் மாட்டிக்கொள்ளாத பெருங் கொள்ளைக் காரனாகில் ஸகல பத்திரிகைகளிலும் இப்படியா இவனை மரியாதை செய்து வருவார்கள், என்று ஸாமான்ய ஜனங்கள் பிரமித்துப் போனார்கள். இவன் செய்து வந்த தெல்லா வற்றையும் தகுந்த அந்தஸ்திலிருப்பவர்கள் மெச்சி வந்ததுடன், கவர்மெண்டில் ஓர் முக்கிய மெம்பரா யிருக்கும் வரவு செலவு மந்திரியாலும் இவன் காரியங்களெல்லாம் ஒப்புக்கொள்ளப்பட்டன. ஐரோப்பிய மகாயுத்தம் நடந்தகாலத்தில் பிரிடிஷ் கவர்மெண்டாருடன் இவன் மிகவும் நெருங்கியே உழைத்து வந்திருக்கிறான். யுத்தகளத்திலும் கவர்மெண்டாரின் நிமித்தம் பல ஏவல்களில் ஸமர்த்தனென்றே பெயர் பெற்றிருக்கிறான். மேலும் காமன்ஸ் ஸபையில் வரவு செலவு மந்திரியால் இவன் மஹாநிபுணன் என்றும் கொண்டாடப்பட்டிருக்கிறான். என்றால், இவன் இதுவரையில் அகப்பட்டுக் கொள்ளாததோர் குற்றவாளி யென்று எவன் தான் புத்தியுடன் சந்தேகித்திருக்கக் கூடும்?

இதன் சம்பந்தமாய் A. G. கார்டினர் பின்வருமாறு எழுதுகின்றார்:—

"நமது தேசத்தில் பொதுஜன நன்மைக்காகப் பாடுபடுகின்றவர்களுள் அநேகர் இவனைப் போலவே இருக்கின்றனர். யோக்கியர்களுக்கு நாள் இது இல்லை. மனத்தூய்மைக்குப் பெருமை இப்போது எங்கும் யாரும் வைப்பதில்லை. தேசம் முழுவதும் பொய்யும் புரட்டும், ஓர் தொத்து நோய் போல, பரவியிருக்கின்றன. இல்லாவிட்டால் நமக்குள் இப்படிப்பட்ட ஒருவன் இவ்வளவு காலம் நிர்ப்பயமாய் செழித்து ஓங்கமுடியுமா? சத்யமென்னும் பத்திரிகை இவனைத்துலைக்க வேண்டுமென்று சங்கணம் பூண்டு இவ்வளவுதூரம் பிரயாஸப் படாவிடில், இவனை யார் கண்டுபிடித்திருக்கப் போகிறார்கள்?"

சுதேசியமானது

அமிர்தாஞ்சனம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு 0—6—0	டப்பி 1-க்கு 0—2—0	டப்பி 1-க்கு 0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

காஞ்சீபுரம் கருடசேர்வை
விளம்பரங்கள்.

நாளது வைகாசிமீ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷை காலத்தில் துண்டு பிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், விநியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.

MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்
அளவு 27 × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
மேற்கூரையில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 5-0-0
வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெரு, ஏவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' காரியாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.